இருக்கிறது. நாம் இதிலிருந்து விலகிப்போய்விடுவது என்பது முடியாத ஒன்முக இருக்கிறது. எனவே, இதுபற்றி மேலும் விவாதிக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து, அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுவதனுல், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மதுரைப் பல்கலைக் கழகப் பேரவைக்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரைப் பல்கலைக் கழகப் பேரவையில் (செனட்) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. கா. காளிமுத்து, (2) திரு. பொ. பத்மநாபன், (3) திரு. மு. சுருளிவேல் (4) திரு. கே. கந்தசாமி ஆகியோரின் பதவிக்காலம் 18—8—1975 ஆம் நாளுடன் முடிந்து விட்டதால், பல்கலைக் கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்குத் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (ப்ரொப்போர்ஷனல் ரெப்ரசென்டேஷன்) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 29—10—1975, புதன்கிழமை காலை 11 மணிக்குள் சட்டப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 29—10—75, புதன்கிழமை மாலை 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 30—10—75 வியாழக்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 31—10—1975 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையிலிருக்கும் உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.